2023 ஏப்ரல் 10] [*திரு. எடப்பாடி* K. *பழனிசாமி*]

இங்கே அவையில் பதிவு செய்யப்படுகின்றன. அதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருவது, தொடர்ந்து மரபாக இருக்கிறது. ஆகவே, தற்போது இந்த மரபைக் கடைப்பிடிக்கவில்லை. இதை நாங்கள் கண்டிக்கிறோம். அதோடு, சட்டப்பேரவையில் அரசிற்கு பிரச்சினை வருகின்றபோது, சட்டப்பேரவை விதிகளை, அவர்களின் வசதிகளுக்கேற்ப தளர்த்துவது வாடிக்கையாகிவிட்டது. சட்டப்பேரவை விதிகளின்படி, ஜனநாயக முறைப்படியும், மரபுப்படியும், நடப்பதில்லை. சட்டமன்றம் வெளிப்படைத் தன்மையுடன் நடப்பதில்லை என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டி, இதையெல்லாம் கண்டித்து, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக வெளிநடப்புச் செய்கிறோம்.

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

(மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஓ. பன்னீர்செல்வம், திரு. பால் மனோஜ் பாண்டியன், திரு. பி. அய்யப்பன் மற்றும் திரு. ஆர். வைத்திலிங்கம் ஆகியோர் அவையில் இல்லை.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவையில் உட்கார்ந்துகொண்டு யாரும் பேசக் கூடாது. யாராக இருந்தாலும், அவையில் உட்கார்ந்துகொண்டு தயவுசெய்து பேசக் கூடாது. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது நான் சொன்னதுதான், ஏதோ ஒரு நோக்கத்தோடு வந்திருக்கிறீர்கள் என்று. மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்தினுடைய விதியைத் தளர்த்துவதுபற்றி, எதிர்த்துப் பேசிவிட்டுப் போகிறார். விதியைத் தளர்த்தி, வழிகாட்டியதே இவர்கள்தான். விதியைத் தளர்த்தித்தான், திரு. சென்னாரெட்டி அவர்கள்மீது தீர்மானத்தைக் கொண்டு வந்தார்கள். அவர்கள் மறந்துவிட்டுப் போகிறார்கள்.*

3. அரசினர் தீர்மானங்கள்

(அ) மதிப்பீட்டுக் குழு உறுப்பினர்கள் தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் தீர்மானங்கள். குழுக்களுக்கான தேர்தல். மதிப்பீட்டுக் குழு. மதிப்பீட்டுக் குழுவிற்கு 16 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

[2023 ஏப்ரல் 10

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, அது வரும். நான் சொல்கிறேன்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *அதற்குமுன், முக்கியமானது.*

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 195–ன்கீழ், 2023–2024 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி, பதினாறு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்"

என்னும் தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

முற்பகல் 11–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

(ஆ) பொதுக் கணக்குக் குழு உறுப்பினர்கள் தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பொதுக் கணக்குக் குழு. பொதுக் கணக்குக் குழுவிற்கு 16 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 203–ன்கீழ், 2023–2024 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி, பதினாறு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.